**தலைப்பு 10 - இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 10 - இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 16 ஆம் திகதி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 409.10 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 317.44 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 91.66 மில்லியன் அதாவது 22.40 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 273.40 | 272.58 | 0.82 | 0.30 |
| மூலதனம் | 135.70 | 44.86 | 90.84 | 66.94 |
| மொத்தம் | 409.10 | 317.44 | 91.66 | 22.41 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 01001 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 5.00 | 4.92 | 3.50 | 4.37 | 20.00 | 14.13 |

### 2.2.2 இலஞ்ச சுற்றறிவளைப்புக்களில் இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 01002 என்ற இலக்க சுற்றிவளைப்புக்களில் இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 150.00 | 2.91 | 1.50 | 3.71 | 275.00 | 18.53 |

### 2.3 கணக்காய்வு அவதானிப்பு

ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் பங்களிப்புடன் ஆணைக்குழுவின் புலனாய்வு கோவைகளின் தகவல்களைப் பேணிச் செல்வதங்காக ரூபா 87.16 மில்லியன் பெறுமதியான உபகரணங்களுடன் கணனி தரவு மென்பொருள் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதன் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2017 யூன் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய கால அட்டவணையில் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாகவும் 2017 யூன் 16 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

மீளாய்வாண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 05 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியிருந்தது. அந்த விபத்தினால் ஏற்பட்ட நட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு 06 மாத குறுகிய கால சலுகையொன்றை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 4.50 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 1.82 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2.68 மில்லியன் அதாவது வழங்கப்பட்ட வெளிநாட்டு மானியத்தில் 59 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக ஆணைக்குழுவின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய பணிகளை செயற்திறனானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் 8, 9 மற்றும் 10 ஆம் பந்திகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதி மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### செயல்முன்னேற்றமொன்றைப் பெற்றிராத செயற்திட்டங்கள்

2016 மார்ச் 01 ஆந் திகதி குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ஆணைக்குழுவின் பரிசோதனை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான வலுவினைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 123.00 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 36.86 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் சேமிப்பு மொத்த நிதிஏற்பாட்டில் 70 சதவீதம் அதாவது ரூபா 86.14 மில்லியன் ஆக இருந்தது. அந்த சேமிப்பிற்கு பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியளிப்பதற்காக ரூபா 30.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பயிற்சி தேவைப்படுகின்ற துறைகளில் மற்றும் பயிற்சிக்காக தொடர்புபடுத்த வேண்டிய உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் திட்டமுறையொன்று விளக்கமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதனால் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக முறையான திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக, ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 20 சதவீதம் அதாவது 6.16 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதிளயவில் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தற்காலிக கட்டிடத்தை வாடகைக்குப் பெறுவதற்கும் சீசீரீவி கெமரா முறைமையொன்றை தாபிப்பதற்கும் முறையே ரூபா 30.00 மில்லியன் மற்றும் ரூபா 8.00 மில்லியன் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த ஒட்டு மொத்த நிதிஏற்பாடும் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) மூலதன மற்றும் ஏனைய பௌதீக வசதிகளைக் கைப்பற்றுவதற்கும் மற்றும் சுற்றிவளைப்புக்களுக்காக அதிதொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் முறையே ரூபா 25.00 மில்லியன் மற்றும் ரூபா 30.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. தேவையான அதி தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பாகவும், அவற்றின் சந்தைவிலை தொடர்பாகவும் உரிய ஆய்வின்றி மற்றும் முறையான பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் ரூபா 55.00 மில்லியன் தொகையான ஒட்டு மொத்த நிதிஏற்பாட்டில் 83 சதவீதம் அதாவது 45.69 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 62 | 36 | 26 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 82 | 27 | 55 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 548 | 223 | 325 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 130 | 71 | 59 | - |
| (v) | ஏனையவை (அமைய /தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 4 | - | 4 |
| | மொத்தம் | 822 | 361 | 465 | 4 |